ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,912—1970 ජූනි 25 වැනි බ්‍රහස්පතින්දා—1970.6.25

14,912 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூன் மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 531 | ஆவணிப்பனவும், குத்தகை விற்பனவும் .. .. | 548 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 538 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 541 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | 548 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


### பதவிகள்—வெற்றிடம்

"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல : **AB. 50/X.2247/70.**

## ஆயுள்வேத திணைக்களம்

### II ஆம் தர விரிவுரையாளர் பதவி (மருந்தாளர் பயிற்சி) ஆயுள்வேதக் கல்லூரி

*ஆயுள்வேதத் திணைக்களத்தில் ஆயுள்வேதக் கல்லூரிக்கான **II** ஆம் தர விரிவுரையாளர் பதவிக்கான (மருந்தாளர் பயிற்சி) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியிட்டு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்* 10.7.1970.

*(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்* 17.7.1970.

**குறிப்பு :**

**(i)** *அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரி இடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான உறை ஒன்றினை தமது கடிதத்துடன் அனுப்புவதோடு அபேட்சகராக வர இருப்பவர் அரசாங்க சேவை உத்தியோகத்தரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.*

**(ii)** *விண்ணப்பபடிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களை இறுதிநாட்கள் வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனாலேற்படும் இடருக்குந்தாமே பொறுப்பாவார் : —*

**(iii)** *வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை குறித்த காலத்திற்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிக அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.*

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச்செலவும்.**—*இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள் சேவைக்கு தகுதியான உடல் நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மருத்துவச்சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்பவர்களிடம் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். அத்*

தகைய சோதனைக்காகிய கட்டணமும் இலங்கைக்கு பயணமாவதற்குரிய செலவும் அவ்வுத்தியோகத்தர்களாலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் உபகாரச்சம்பள நிதிக்கு உதவு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் செய்கைக்கு உரித்துடையவராக மாட்டார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டுச்சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—12 × 360—11,040. 9,600 ரூபாவிற்கு முன் தகுதிகாணத்தடை 9,600 ரூபாவிற்குமுன் உள்ள தகுதிகாணத்தடை தன் முதலான ஆராய்ச்சி அல்லது ஆயுள்வேதம் தொடர்பான வெளியீடுகளினால் அவ்வுத்தியோகத்தரின் திறமையை வெளிப்படுத்தும் குறிப்பிடத்தக்க பெறுபேறுகள், அல்லது உயர்ந்த பட்டத்திற்கு பின் பெறும் தகைமைகள் ஆகியவற்றிலொன்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் (அவன் அல்லது அவள்) திருப்திகரமாக நிரூபிக்கவேண்டியதாவது—

(அ) சிறந்த நன்நடத்தையும் தேகாரோக்கியமும் உடையவரெனவும்

(ஆ) 10.7.1970 இல் 25 வயதிற்கு குறையாதவரெனவும் 40 வயதிற்கு மேற்படாதவரெனவும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இக்கூடிய வயதெல்லை பொருந்தாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றின் 1 ம் வகுப்பு சிறப்புச் சித்தியெய்திய டிப்ளோமா அல்லது 1965 ம் ஆண்டிற்கு முன் சிறப்புச் சித்தியெய்திய டிப்ளோமா பட்டம் உடையவரென்றும் அல்லது ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குபின் உயர் தகைமை பயிற்சி பெற்றுள்ளவரென்றும் திருப்திகரமான அத்தாட்சிகள் காட்டல் வேண்டும்.

**குறிப்பு :**

அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றின் 1 ம் வகுப்பு சிறப்புச் சித்தியெய்திய டிப்ளோமா உடையவர்களும் 1965 ம் ஆண்டிற்குமுன் 1 ம் வகுப்பில் சித்தியெய்தியவர்களும் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் 4 ம் பகுதியில் (இ) பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பதாரர்கள் குறைவாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே மேற்கூறப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் :

(ஈ) ஆயுள் வேத ஔடதபாகம், குணபாடம், ரச சாஸ்திரம் ஆகியவற்றில் உயர் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் சிங்களத்தில் விரிவுரைகள் நிகழ்த்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் கேட்கும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப்பதிவுச்சான்றிதழ் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது),

(ஆ) பல்கலைக்கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்,

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்,

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்திபெற்ற மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

குறிப்பு :

(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாவது விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தலைவர்களூடாக சமர்ப்பிக்கவேண்டும். எனினும் அவர்கள் தாங்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் (" ") எனக்குறிப்பிட்ட அட்டையை இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

8. இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கசேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (" " எனக்குறிப்பிடப்பட்ட) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைகளுள் விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்.
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ..

6–700/1—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

No. AB. 61/X. 2248/70

## சட்ட ஆணைக்குழு

### செயலாளர் பதவி

சட்ட ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 10.7.1970
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 17.7.1970

**குறிப்பு :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா எனபதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடர்ப்பாட்டுக்குத் தாமே பொறுப்பாளர்.

(iii) வெளிநாடுகளிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பின் விண்ணப்பப் படிவங்களை, இறுதிக்கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற்றெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்குரிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(அ) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் கைம்பெண் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் மூன்றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு : ஆண்டொன்றுக்கு ரூபா 11,520 தொடங்கி 480 ரூபா கொண்ட 9 ஆண்டுச் சம்பள உயர்வுகளும் 600 ரூபா கொண்ட 3 ஆண்டுச் சம்பள உயர்வுகளுமாக 17,640 ரூபா வரை (ஆண்டொன்றுக்கு 14,880 ரூபாவின் முன் திறமைத்தடையொன்றும்).

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970.7.10 தேதியில் 45 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

(இ) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத சேவையுள்ள உயர் நீதிமன்ற வழக்குரைஞராகவிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் **(முக்கிய குறிப்பு :** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றி சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டடையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

செயலாளர்,
அரசாங்க அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகாரசபை,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
18.6.1970.

6—700/2—25.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,912

---

No. AA.43/x. 2249/70.

## கட்டடங்கள் திணைக்களம்

### மேற்பார்வைப் பொறியியலாளர் (மின்சாரம்) பதவி

கட்டடங்கள் திணைக்களத்தில் மேற்பார்வைப் பொறியியலாளர் (மின்சாரம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளுக்கு முன்னர் செயலாளர், பொதுசேவை ஆணைக்குழு, அ. பெ. எண். 500, கொழும்பு 1 என்ற முகவரிக்குக் கிடைக்கவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 10.7.70.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 17.7.1970.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோள் அஞ்சலில் அனுப்பும்பொழுது முத்திரையிடாத 9" × 4" அளவுக்குக் குறையாத தமது முகவரியிடப்பட்ட உறையையும் உள்ளடக்க வேண்டும். பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர் அல்ல என்பதையும் சுட்டிக்காட்டவேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவமோ அத்தகைய படிவத்தின் சார்பில் எழுதப்படும் கடிதமோ தபாலில் காணாமற்போய்விட்டது என்றோ தாமதமாக வந்தடைந்தது என்றோ செய்யப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசிநாள் வரை தங்கள் விண்ணப்பங்களை தாமதப்படுத்தும் பரீட்சார்த்திகள் அத்தகைய தாமதத்தால் ஏற்படும் பலாபலன்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(iii) வெளிநாட்டு விண்ணப்பகாரர் விண்ணப்பப் படிவங்களை வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் விரும்பினால் தமது விண்ணப்பங்களை குறிப்பிட்ட காலவரையின் இடையில், வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கோ தமது இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள இலங்கைத் தூதராலயத்திற்கோ பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக சமர்ப்பிக்கலாம்.

(iv) **மருந்துவ சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தினால் நியமனம் பெறும் வெளிநாட்டு இலங்கை உத்தியோகத்தர் தாம்சேவை செய்வதற்கு போதிய உடல் நலத்தை உடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்காக அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஒருவரினால் தம்மை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அத்தகைய சோதனையின் செலவும் இலங்கைக்கு வரும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

**2. நியமன விதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப் பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தியால் விதவைகள் அநாதைப் பிள்ளைகள் நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்படல்வேண்டும்.

**3. வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அளவுத் திட்டம் பின்வருமாறு : ஆண்டொன்றுக்கு ரூபா 17,040—3 × 600—ரூபா 18,840

**4. தகைமைகள்.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளை உடையரெனத்திருப்திகரமான அத்தாட்சி வழங்கவேண்டும் :—

(அ) சிறந்த குண இயல்பும் உடல் நலமும்.

(ஆ) 1970.7.10 ஆம் திகதியன்று 30 வயதிற்கு குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கட்கு இவ்வயதெல்லை பொருந்தாது)

(இ) (i) இலண்டன் பொறியியலாளர் நிறுவனத்தில் கூட்டு அங்கத்துவம் ;

அல்லது

(ii) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் கூட்டு அங்கத்தினராகவும் நிறுவனத்தால் தத்துவம் பெற்ற மின்சாரப் பொறியியலாளராக அங்கீகரிக்கப்பட்டவராகவும் ;

(ஈ) அரசாங்க திணைக்களமொன்றில் மின்சாரப் பொறியியலாளராகக் குறைந்தது 10 ஆண்டு அனுபவம் பெற்றிருப்பவராகவும் ;

(உ) காற்றைச் சீராக்கும் அறிவுபெற்றிருப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பகாரர் பின்வரும் பத்திரங்களில் ஒன்றினையோ எல்லாவற்றையுமோ கேட்கப்படும்போது சமர்ப்பிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (குறிப்பு : ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் கோவைக்காக வழங்கப்படும் பிறப்புச் சார்பான சான்றிதழ் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டம் அல்லது மிகவும் உயர்ந்த கல்விச்சார்பான சான்றிதழ் ;

(இ) குண இயல்பு சார்பான இரண்டு சான்றிதழ்கள். ஒன்று பாடசாலை அதிபர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடம் பெற்றதாக இருத்தல்வேண்டும் ;

(ஈ) சிங்களத்திலும்/தமிழிலும் தேறியுள்ள மிகவும் உயர்ந்த பரீட்சை சார்பான சான்றிதழும்.

குறிப்பு :

(1) விண்ணப்பப்படிவத்துடன், எந்த விதமான பத்திரமோ, பத்திரத்தின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(2) கேட்கப்படும்போது பத்திரங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பகாரரது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். எனினும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தை அனுப்பிய திகதியைத் தெரிவுபடுத்தும் அறிவிப்பை பொதுச் சேவை ஆணைக்குழுச்செயலாளருக்கு, விண்ணப்பங்களுக்கான முடிவு திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கும் வண்ணம் நேரடியாக அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் வழங்கப்படும் அச்சிடப்பட்ட ("பி" எனக் குறிக்கப்பட்ட) அஞ்சல் அட்டையை இக் காரணத்திற்காகப் பாவனை செய்யவும்.

7. விண்ணப்பங்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கடிதப் போக்குவரத்தும் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளரைத் தவிர்ந்த இந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தருக்கு விலாசமிடப்படக்கூடாது.

8. இந்த அரசாங்க வர்த்தமானியில் I ஆம் பிரிவின் II ஆம் பாகத்தின் ஆரம்பத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளின் நியமனங்களுடன் சார்புள்ள பொதுநிபந்தனைகளைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவங்களுடன் வழங்கப்பட்டதும் ("ஏ" எனக் குறிக்கப்பட்டதும்) அச்சிட்ட அஞ்சல் அட்டையில் கொடுக்கப்பட்டதுமான அறிவுறுத்துரைகளுக்கேற்ப பரீட்சார்த்திகள் அதனைப் பூரணப்படுத்தி, அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றதும், பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படும்.

இத் தேவைக்கு அமைய நடவாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய நடந்தவர்கள் முடிவு திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தமது விண்ணப்பம் கிடைத்தது என்ற அறிவிப்பைப் பெறுவிடின் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு இவ்விடயத்தை உடனடியாக அறிவித்தல் வேண்டும். இத்தேவைக்கமைய நடவாத விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கான கோரிக்கை செய்யும் தகைமையை இழந்துவிடுவார்.

டி. ஆர். எல். பாலசூரிய,<br>
செயலாளர்,<br>
பொதுச் சேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,<br>
காலிமுகச்செயலகம்,<br>
அ. பெ. இல : 500,<br>
கொழும்பு 1, 1970 ந ௵ ஜுன் ௴ 18 ந உ.

6–700/3—25.6.70 ந திகதிய வர்த்தமானி இல.14,912

## சமூக சேவைப் பகுதி

### சமூக சேவை உத்தியோகத்தர்கள் பதவி

1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 14,902 இலக்கம் கொண்ட "கசெற்" பத்திரிகையில் வெளியான 7.4.1970 திகதியை உடைய அறிவித்தல் சார்பாக அறிவிப்பதாவது இப்பதவிக்குரிய விண்ணப்பங்களின் முடிவு திகதி 10.7.1970 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏ. எம். எம். சகாப்தின்,<br>
சமூக சேவைப் பகுதி அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,<br>
த. பெ. நிர். 577,<br>
பாலதக்ஷ மாவத்தை,<br>
காலிமுகப்பு,<br>
கொழும்பு 3.<br>
1970 ம் ௵ ஜுன் ௴ 15 ந் தேதி.

6–610—25.6.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## சௌக்கியத் திணைக்களம்

### முகாரி பதவி, மின்–வைத்தியச் சாதனங்கள் தரம் II மின்வைத்தியப் பொறியியற் பிரிவு

சௌக்கியத் திணைக்களத்தின் மின்–வைத்தியப் பொறியியற் பிரிவின் முகாரி (போர்மன்) மின்–வைத்தியச் சாதனங்கள், தரம் II என்ற ஒரு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு தயாரித்து நிரப்பப்பட்டு, 1970 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் சௌக்கிய சேவை அதிபதி, தபாற்பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்துக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்று ரூபா 4,728—12 × 144—ரூபா 6,456.

3. **வயதெல்லை.**—விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**கவனிக்க.**—ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை விதிக்கப்படவில்லை.

4. **கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்.**—

(அ) **கல்வித் தகைமைகள் :**

(i) கணிதம் (மதமற்றிக்ஸ்), பௌதிகவியல் என்பவற்றுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது

(ii) சிங்களம்/தமிழ்ப்பாஷை, கணிதம் (மதமற்றிக்ஸ்), பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளுள் பெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பத்திரம்.

(ஆ) **தொழிநுட்பத் தகைமைகள் :**

ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(i) கட்டுப்பெத்தை, செய்முறைத் தொழிநுட்பவியல் நிறுவகத்தின் கனிட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் பயிற்சித் தொடரைப் பூர்த்திசெய்துள்ளாரென்று அல்லது அதற்குச் சமமான தகைமைகள் பெற்றுள்ளாரென்றும், அத்துடன்

(ii) எக்ஸ்–கதிர் உபகரணம், மின்–இதயத் துடிப்புப் பதிவுக் கருவி, வைத்தியத் தொலைக்காட்சிச் சாதனம், அதிர்வு அளவுமானி, கிருமியழித்தற் கருவி, குளிரூட்டும் இயந்திரங்கள், இவற்றைப் போன்ற மின்–வைத்தியச் சாதனங்கள் என்பவற்றைப் பொருத்துதல், பரீட்சித்தல், வலுவளத்தல், பேணுதல், பழுதுபார்த்தல் என்பவற்றில் குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவரென்றும் திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

**கவனிக்க.**—சௌக்கியத் திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர்களில், குறைந்தது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திபெய்தியுள்ளதுடன் மேலே பி (i), (ii) ஆம் பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள தொழிநுட்பத் தகைமைகளைக் கொண்டுள்ளவர்களும் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர்.

5. **நியமன நியதிகள்.**—இந்தப் பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் உள்ளதுமாகும். நேரடிநெறிக்கப்படும் அபேட்சகர் விதவை, அநாதர் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) அவர்களின் விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்கென வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா). பிறப்புப் பதிவு செய்யப்படாதவர்களின் விடயத்தில், பதிவாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் அல்லது வேறெட்ட சான்றிதழ் வயதுக்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படும் ;

(ஆ) பெற்றுள்ள உயர் கல்வித் தகைமைகளின் சான்றிதழ் ;

(இ) பெற்றுள்ள தொழிநுட்பத் தகைமைகளின் சான்றிதழ் ;

(ஈ) விண்ணப்பகாரரின் குணத்துக்கு அத்தாட்சியாக அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்களின் அத்தகைய நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் சேவை செய்யும் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த விளம்பரத்தின் தேவைகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அம்சத்திலும் சரியாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்கசேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சௌக்கிய சேவை அதிபதி அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
தபாற் பெட்டி 500,
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு யூன் மீ 15 ந் உ.

வி. பி. எ. பெரேரா,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

## விண்ணப்பப் படிவம்

**மூகாரி பதவி, மின்—வைத்தியச் சாதனங்கள்**
**தரம் II மின்—வைத்தியப் பொறியியற் பிரிவு**

1. முழுப்பெயர் : ————.
   (தனித்தனி எழுத்துக்களில்)

2. தற்போதைய விலாசம் : ————.

3. பிறந்த திகதியும், விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதியன்று வயதென்ன என்பதும் :

| பிறந்த திகதி | வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|---|
| ............ | ............ | ............ | ............ |

4. தேசிய இனம் : ————.
   பரம்பரையான இலங்கையரா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கையரா : ————.

5. தற்போது வசிக்கும் தொழில், ஏதாவதிருப்பின் : ————.

6. கல்வித் தகைமைகள் : ————.
   (சித்திபெய்திய பரீட்சையையும் பாடங்களையும் குறிப்பிடுக)

7. தொழிநுட்பத் தகைமைகள் : ————.
   (சித்திபெய்திய பரீட்சையைக் குறிப்பிடுக)

8. பெற்ற அனுபவத்தின் விவரங்கள் : ————.

9. வேறு உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் : ————.

இந்த விண்ணப்பத்தில் நான் சமர்ப்பித்துள்ள விவரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமைநீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும் நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

6–608—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912.

---

## கமத்தொழிற்றிணைக்களம்

**விவசாய பரிசோதனை உத்தியோகத்தர் பதவிகள்**

விவசாயப் பரிசோதனை உத்தியோகத்தர் வகுப்பு II, பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(1) இப்பதவிகள் நிலையானவையும் உபகாரச் சம்பள உரிமை உடையனவும்.

(2) நியமனம் முதற்கண் 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் அமையும். இத்திணைக்களத்தில் ஏலவே நிரந்தர சேவையிலுள்ள அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து அன்னவர் குறிக்கப்பட்ட காலத்துக்கு பதில் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

(3) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தீவின் எப்பகுதியிலும் கடமையாற்ற சித்தமுடையராயிருத்தல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்—திரட்டுச் சம்பளம் ரூபா 5,304—9 × 144 ம், 4 × 180—ரூபா 7,320 ஆண்டொன்றுக்கு (ரூபா 6,024 க்கு முன் வி. த.)

(1.10.69 க்கு முன்னுள்ள தொடர்பான சம்பளம் ரூபா 2,820—9 × 120, 4 × 180—4,620)—ரூபா 3,420 க்கு முன் வி. த.).

4. **தேவையான தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் நிரூபிக்கவேண்டியன.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் ;

(ஆ) (1) விவசாயப் பட்டதாரி **அல்லது**

(2) தாவரவியல், விலங்கியல் அல்லது இரசாயனம் சிறப்புப்பட்டமுடைமை **அல்லது**

(3) தாவரவியல், விலங்கியல் அல்லது இரசாயனம் சாதாரண பட்டம்.

(இ) 1970 யூலை 15 ல் 22 வயதுக்குக் குறையாமையும் 35 வயதுக்கு மேற்படாமையும் (அரச சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை அமையாது).

5. விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டிய பிரதிகள்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**மு.கு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) அண்மைய குணச் சான்றிதழ் இரண்டு.

**மு.கு.**—மேற்படி சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பப்பட வேண்டியதில்லை.

6. விண்ணப்பங்களைக் கீழ்க்காட்டப்பட்டுள்ள மாதிரி ஆயத்தஞ்செய்து பதிவுத் தபாலில் 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 க்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அரச சேவையிலுள்ளோரின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டுமேயன்றி அமைச்சருக்கோ இத்திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர் எவருக்குமோ சொந்தப் பெயரிட்டு அனுப்புதல் ஆகாது.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க்குக.

9. 1969 ஆம் ஆண்டு ஒக்தோபர் 17 ம் திகதி வெளியான கசட்டில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்தோர் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

பி. ரி. ஜினநதிரதாச,
பதில் கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
1970 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 9 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கமத்தொழிற்றிணைக்கள கமத்தொழில் பரிசோதனை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) முழுப்பெயர் : ————.
சொந்தப்பெயர் : ————.
மறுபெயர்கள் : ————.

2. நிலையான விலாசம் : ————.

3. விண்ணப்பகாரரின் 1970 யூலை 15 ல் சரியான வயதும் பிறப்புத் திகதியும் : ————.
(பிறப்புச் சான்றிதழ்ப் பிரதி அனுப்புக)

4. தந்தையின் பெயரும் தொழிலும் : ————.

5. பிறப்பிடம்—
(அ) விண்ணப்பகாரரின் தந்தை : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் : ————.

6. (அ) நாட்டினம் : ————.
(ஆ) இலங்கைப் பிரசையாவெனப்படுதற் கூறுக : ————.
(1) பரம்பரையால் : ————.
(2) பதிவால் : ————.

7. மிக உயர்ந்த கல்வித் தராதரம்—
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.

8. பிற விவரங்கள் : ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதி அற்றவராகப்படுதற்கும் பின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் எனவும் அறிகின்றேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–629—25.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,912.

---

## பொருட் கொள்வனவுப் பகுதி

**டிப்போ அதிகாரிகள் பதவிகள்**

பொருட் கொள்வனவுப் பகுதியிலுள்ள மேலே கூறப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரிப் பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப் பத்திரங்கள், பதிவுத் தபாலில் பொருட் கொள்வனவுக்கமிஷனர், 4 வது மாடி, மிலலேஸ் கட்டடம், கொழும்பு—1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இவ்விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 12 ம் திகதிக்குப் பிந்தாமல் பொருட் கொள்வனவுக்கமிஷனருக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1970 ம் ஆண்டு மாச் மாதம் 26 ம் திகதிய 14,899 இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க ஏற்கனவே விண்ணப்பப் பத்திரங்கள் சமாப்பித்தோர் மறுமுறையும் விண்ணப்பப் பத்திரங்கள் சமாப்பிக்க வேண்டியதில்லை.

2. **தேவையான யோக்கியதாம்சங்கள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரும் கவனிக்கவேண்டிய விஷயங்கள் :—

(அ) 1970 ம் ஆண்டு யூலை மாதம் 12 ம் திகதியில் வயது 40 வயதிற்குக் கூடாமல் இருத்தல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் ஒன்று அல்லது பல யோக்கியதாம்சங்களை உள்ளதாயிருத்தல் வேண்டும் : கனிஷ்ட பாடசாலை தராதரபத்திரம் அல்லது உயர்தரப் பரீட்சை, அல்லது—

(i) இரப்பரைத் தரம்பிரிக்கும் அறிவுடன் இலங்கையின் ஏற்றுமதிச் சரக்குகளை தரம் பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் 10 வருட அனுபவம் இருக்கவேண்டும், அல்லது

(ii) இரப்பரை மட்டும் தரம்பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் மட்டும் 10 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த தார்மீக ஒழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராயிருக்க வேண்டும.

3. **சம்பள விகிதம்** : இப்பதவிக்குரிய ஒன்றுகூட்டிய வேதன விகிதம்—

வருடமொன்றிற்கு ரூபா 3,864—வருடமொன்றிற்கு ரூபா 144 விகிதம் 18 வருடாந்த உயர்வுகளால் ரூபா 6,456 வரை உயரும்.

4. **சேவை நிபந்தனைகள்**—பதவிகள் தற்காலிகமானவை, பென்சன் இல்லை :—

(i) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை அமுலாக்குவதற்கு, முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல் நடத்துவதற்கு ஏற்கனவே இருந்துவரும் சட்டதிட்டங்களுக்கு அல்லது இனிமேல் செய்யப்படும் சட்டங்களுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

(ii) அவர்களுடைய நியமனங்கள் முன்கூட்டியே நிறுத்தப்பட்டாலன்றி மூன்று வருட காலத்திற்குமேற்பட்ட உத்தியோகம் குறிப்பிட்ட தேசசிப பரீட்சைகளில் சித்தி எய்துவதைப் பொறுத்திருக்கும். சிங்கள் தேர்வுப் பரீட்சையில் சித்தி எய்துவது தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் 3 வருடங்களுக்குமேல் சேவையில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படுவாரென்று கருதப்படமாட்டார்.

(iii) நிரந்தரக் காரியதரிசி தீர்மானிக்கும் தொகையையே பாதுகாப்புப் பணமாக சமாப்பிக்கப்படவேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் நாட்டில் எந்தப் பாகத்திலும் சேவைசெய்ய தயாராக இருக்கவேண்டும.

5. விண்ணப்பகாரர் விண்ணப்பப் பத்திரங்களோடு மூலக் கொப்பிகளை இணைக்காது நகல் கொப்பிகளையே இணைக்கவேண்டும் :—

(அ) பிறப்புப் பத்திரம (ஞானஸ்நான சான்றிதழ்களோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) உயர்தரக் கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) இரப்பர் உற்பத்தியில் அல்லது தரம் பிரிப்பதில் அல்லது மூன்றிலும் உள்ள அனுபவம் சம்பந்தமான பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பகாரர்களின் யோக்கியதாம்சங்கள், ஒழுக்கம், பதவிக்கு நியமனம் செய்வதற்கான தகைமை ஆகியவற்றைக் காட்டும் மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். இந் நற்சாட்சிப் பத்திரங்கள் அண்மையில் பெற்றதாக இருக்கவேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே இருப்பவர்கள் அத்தகைய நற்சாட்சிப் பத்திரங்களை சமர்ப்பிக்கத் தேவையில்லை).

6. இவ் அரசாங்க வர்த்தமானி முதற் பகுதி இரண்டாம் பிரிவில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு உள்ள நியமனத்திற்கு ஏற்ற பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

தி. பதமநாதன்,
பொருட் கொள்வனவுக் கமிஷனர்.

தபால் பெட்டி 147,
கொழும்பு, 1970 ம் ஆண்டு யூன் மீ 15 ந உ.

டிப்போ அதிகாரிப் பதவிக்குரிய மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (தனித்தனி எழுத்தில்) : ————.
(அ) முதற் பெயர் : ————.
(ஆ) மற்றும் பெயர்கள் : ————.

2. தபால் விலாசம் : ———— .

3. (அ) இனம் : ————.
(ஆ) இலங்கைப் பிரசையா அல்லவா : ————.
(i) வம்சாவழியால் : ————.
(ii) பதிவு செய்வதால் : ———— .

4. (அ) பிறந்த திகதியும் 12.7.70இல உள்ள வயதும் (பிறப்புப் பத்திரக் கொப்பி இணைத்தல் வேண்டும்) : ————.
(ஆ) கலியாணமானவரா அல்லாதவரா : ————.

5. சித்திபெற்ற கல்வி உயர்தர பரீட்சைகளும் சித்திபெற்ற பாடங்களும் (திகதிகளுடன்) : ————.

6. எங்கே கல்வி பயின்றது. பள்ளிக்கூடத்திலிருந்து விலகிய திகதி : ————.

7. அறிக்கையில் 2 (ஆ) (i) அல்லது (ii) குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் உள்ள அனுபவம் (இந்த அனுபவம் சம்பந்தமான நகல் கொப்பி நற்சாட்சிப்பத்திரங்கள் இணைக்க வேண்டும்) : ————.

8. சிங்களம் வாசிப்பதில், எழுதுவதில், விவாதிப்பதிலும் உள்ள திறமை : ————.

9. பள்ளிக்கூடம் விட்டபின் செய்த உத்தியோகங்களும் அவற்றின் திகதிகளும் முழு விபரங்களும் : ————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்கள் பெயர்களும் விலாசங்களும் (மூலக்கொப்பிகளை இணைக்காது நகல் கொப்பிகளே இணைக்கவேண்டும்) : ————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையுமென இத்தால் நான் உறுதியளிக்கிறேன். மேலே கூறப்பட்டிருக்கும் விபரங்களில் எதாவது பொய்யானால் அல்லது சரியானதல்லாயிருந்தால் அதை நியமனத்திற்கு முன் கண்டுபிடித்தால் நான் தகுதியற்றவரென்றும் நியமனத்திற்குப் பின் கண்டுபிடித்தால் நான் வேலையிலிருந்து நஷ்டஈடொன்றுமின்றி நீக்கப்படுவேனென்று எனக்குத் தெரியும்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

6-637—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

இல. FA/2/213

**கல்வி அமைச்சு**

**பிரான்சு அரசாங்கத்தால் வழங்கப்படும் தொழில்நுட்பக் கூட்டுறவுப் புலமைப் பரிசில்கள் 1970**

14,906 ஆம் இலக்க, 15.5.1970 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைப் பார்க்கவும். விண்ணப்ப முடிவுத் திகதி 6.7.1970 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
கொழும்பு 2,
1970 ம் ஆ ஜூன் மீ 17 ந் உ.
6-661—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கமத்தொழில் இலாகா

### கமத்தொழிற் பாடசாலை சான்றிதழ் பயிற்சி

கமத்தொழிற் பாடசாலையில் சேர்ந்து கமத்தொழில் சான்றிதழ்ப் பயிற்சியை இரண்டாண்டுகளுக்குப் பெறுவதற்கு விரும்புவோரிடமிருந்து மனுக்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திரத்தில் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 15 ந் திகதிக்கு முன்பாக கோரப்படுகின்றன. இம்மனுப்பத்திரங்களை " அதிபர், கமத்தொழிற் பாடசாலை, குண்டசாலை " என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இருவருடச் சான்றிதழ்ப் பயிற்சி இரு பகுதிகளாகவுள்ளன.

**முதலாம் பகுதி.**—பொதுப் பயிற்சி எல்லா மாணவர்கட்கும் கட்டாயமானது. விவசாயம் சம்பந்தப்பட்ட பொது விஞ்ஞானமும் கணிதமும், கமத்தொழில் தத்துவங்களும் கால நிலையும், மிருகபரிபாலனத் தத்துவங்கள், நெல் வேளாண்மை, கமத்தொழில் பொருளாதாரம், பண்ணைப் பரிபாலனம் ஆதியன உட்பட.

**இரண்டாம் பகுதி.**—விரும்பிய பாடத்தில் விசேட பயிற்சி பெறுதல். விண்ணப்பதாரர் விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் பாடங்களுள் ஒன்றைத் தெரிந்தெடுக்கலாம் :—

(1) **பயிர் வேளாண்மை :** பெருந்தோட்டப் பயிர்கள், நெல்லும் மேட்டுநிலப் பயிர்களும், உபகரணங்களும் சாகுபடி முறைகளும், கமப்பரிசோதனைகள் ஆகியவை உட்பட.

(2) **மிருகபரிபாலனம் :** மாடு, எருமை, கோழி, பன்றி, ஆடு ஆகிய விலங்கினங்களின் வளர்ப்பு முறைகள் போசனை, கட்டிடங்கள் உபகரணங்கள், சாகுபடி முறைகள் ஆகியவை உட்பட.

(3) **பூங்கனியியல் :** பூங்கனியியல் தத்துவங்கள், கனியியல், பழப்பாகனம், மரக்கறிச் செய்கை, வர்த்தகப் பயிர்ச் செய்கை, தேனீ வளர்ப்பு, பூந்தோட்டச் செய்கை, உபகரணங்கள் சாகுபடி முறைகள் ஆதியன உட்பட.

(4) **கமப்பொறியியல் :** பொறியியல் விஞ்ஞானம், கமப்பொறிகளும் வலுவும், பொறி உபயோகம், கட்டிட அமைப்பு, வயல் பொறியியல், வரைதல் பாகம் செய்தல், பொதுப் பயிர் வேளாண்மை ஆதியன உட்பட.

(5) **கிராமிய மனையியற் கலை :** வீட்டுத் தோட்டம், பூந்தோட்டம், கால்நடை வளர்த்தல், வீட்டுப்பணி, தையற்கலை, உடை தயாரித்தல், சுகாதாரம், சிசுபரிபாலனம், முதலுதவி, நோயாளர் பராபரிப்பு ஆதியன உட்பட.

இப்பயிற்சிக்கு ஆண்களும், பெண்களும் விண்ணப்பிக்கலாம். இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ள ஐந்து (5) பாடங்களுள் ஒன்றைப் பெண்கள் தெரிந்தெடுக்கலாம். ஆனால் ஆண்கள் முதல் நான்கு (4) பாடங்களுள் ஒன்றைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தெரிந்தெடுத்த முக்கிய பகுதியை இரண்டாம் ஆண்டுப் பயிற்சித் தொடக்கத்தில் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகுதியுடையோராய் இருத்தல் வேண்டும் :—

**வயது.**—1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதியில் 17 க்கும் 25 க்கும் இடைப்பட்ட வயதினராய் இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்.**—(1) பயிர் வேளாண்மை, மிருக பரிபாலனம், பூங்கனியியல், கமப்பொறியியல் ஆகியவற்றுள் ஒன்றை முக்கிய பாடமாக எடுக்க விரும்புவோர்.—

(அ) கமத்தொழிற் சாதன பயிற்சிப் பாடசாலையில் ஓராண்டுப் பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்தவராகவும், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக அல்லது சிங்களம் அல்லது தமிழ்மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் நான்கு பாடங்கள் சேர்த்து பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கமத்தொழிற் சாதனை பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறாத விண்ணப்பதாரர்கட்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண) பின்வரும் பாடங்களுடன் சேர்த்து ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும் :

(1) சிங்களம் அல்லது தமிழ் மொழி,

(2) எண்கணிதம் அல்லது கணிதம்,

(3) விவசாயம், பொதுவிஞ்ஞானம், உயிரினவியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றுள் ஒன்று.

2. கிராமிய மனையியற் கலையை முக்கிய பகுதியாக எடுக்க விரும்புவோர் :—

(அ) கமத்தொழிற் சாதனை பயிற்சிப் பாடசாலையில் ஓராண்டுப் பயிற்சியை முடித்து வெற்றிகரமாக இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக அல்லது சிங்களம் அல்லது தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் நான்கு பாடங்கள் சேர்த்து பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கமத்தொழிற் சாதனை பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறாத விண்ணப்பதாரர்கட்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பின்வரும் பாடங்கள் சேர்த்து (6) ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும் :

(1) சிங்களம் அல்லது தமிழ் மொழி,

(2) எண்கணிதம் அல்லது கணிதம்,

(3) விவசாயம், பொது விஞ்ஞானம், உயிரினவியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல், மனையியல், சுகாதாரமும் சரீரசாஸ்திரமும், தையற்கலை ஆகியவற்றுள் ஒன்று.

கமத்தொழிற் பாடசாலையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் அளிக்கப்படும். மனுதாரர்கள் இம்மொழிகளில் பாட போதனைகளைப் பெற்று சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்பாடசாலை குண்டசாலையில் அமைந்துள்ளது. பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பாடசாலை விடுதியில் கட்டாயமாக வதிதல் வேண்டும். ஓராண்டுக்குரிய கட்டணம் உணவுக்கும் தங்குமிடத்திற்குமாகச் சேர்த்து சுமார் ரூபா 550 ஆகும்.

கமத்தொழிற் பாடசாலையில் கொடுக்கும் இச்சான்றிதழ்ப் பயிற்சி ஒரு தொழில் முறைப் பயிற்சியாகும். எனவே இப்பயிற்சி முடித்தபின் கமத்தொழிலை அப்பியாசம் செய்ய விரும்பும் மாணவர்களும் தனியார் துறைகளில் தகுந்த வேலையைப் பெற விரும்பும் மாணவர்களுக்குமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் இப்பயிற்சியில் சித்தியடைவோருக்கு உத்தியோகம் பெற இடமுண்டு என்றோ உத்தியோகம் கொடுக்குமென்றோ உத்தரவாதம் கொடுக்கவில்லை என்பதை மனுச் செய்வோர் நன்கு கவனித்தனத்தில்கொள்ளவேண்டும்.

கலாநிதி இ. அபயரத்ன,
கமத்தொழில் அத்தியட்சகருக்காக.

கமத்தொழில் இலாகா,
கொழும்பு,
13.6.1970.

## கமத்தொழிற் பாடசாலை மனுப்பத்திரம்

1. குடும்பப் பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)

2. இதர பெயர்கள் : ————.

3. முகவரி : ————.

4. ஆண்/பெண் : ————.

5. பிறந்த திகதி : ————.
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதியில வயது :
——.வருடம் ——.மாதம் ——.நாள்

6. தெரிவு செய்யும் விசேட பயிற்சிப் பாடம் (2 ம் பகுதியின்படி)
(1) ————.
(2) ————.
(3) ————.

7. இறுதியாக எடுத்த பகிரங்கப் பரீட்சையின் பெயர் : ————.
எடுத்த திகதி : ————.

8. சிரேஷ்ட பாடசாலை அல்லது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள்

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | ........ | ........ | 6. | ........ | ........ |
| 2. | ........ | ........ | 7. | ........ | ........ |
| 3. | ........ | ........ | 8. | ........ | ........ |
| 4. | ........ | ........ | 9. | ........ | ........ |
| 5. | ........ | ........ | 10. | ........ | ........ |

9. விரும்பும் போதனை மொழி : ————.

10. சித்தியடைந்த ஆங்கிலத் தராதரம் : ————.

11. விண்ணப்பதாரர் கமத்தொழிற் சாதனை பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றிருந்தால்.—
(அ) கமத்தொழிற் சாதனை பயிற்சிப் பாடசாலையின் பெயர்:————
(ஆ) வருடம் : ————.
(இ) பெறுபேறு : ————.

12. விண்ணப்பதாரர் இளைஞர் விவசாயக் கழக அங்கத்தவராக இருந்தால்.—
(அ) கழகத்தின் பெயர் : ————.
(ஆ) மாவட்டம் : ————.

13. இறுதியாகப் படித்த பாடசாலையின் பெயர் : ————.
பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

14. விண்ணப்பதாரர் விவசாயத்தில் அனுபவம் பெற்றிருந்தால் அவற்றின் விபரங்கள் : ————.

15. தந்தை அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும் : ————.

16. தந்தை அல்லது பாதுகாவலரின் தொழில் : ————.

17. விண்ணப்பதாரர் பயிற்சியின் பின் கமத்தொழிலில் ஈடுபடுவதாக இருந்தால் அவற்றுக்காக இருக்கும் வழி வகைகள் : ————.

18. விண்ணப்பதாரர் பயிற்சியின் பின் சம்பளம் பெறும் உத்தியோகத்தில் சேர விரும்பினால் அதற்காக விண்ணப்பதாரருக்கு இருக்கும் வழிவகைகள் : ————.

19. விண்ணப்பதாரர் இவ்விவசாயப் பயிற்சியைப் பெறத் தகுதி உடையவர் என்று உறுதிப்படுத்துபவர் இருவரின் பெயரும் விலாசமும் :
(அ) ————.
(ஆ) ————.

குறிப்பு.—விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மேற்கூறிய உறுதிப்படுத்துபவர்களிடமிருந்து பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகளுடன் இறுதியாகப் படித்த பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற நற்சாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியையும் சமர்ப்பிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியளவில், மேலே நான் கொடுத்துள்ள பதில்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்திப் பிரதிக்ஞை செய்கின்றேன்.

————.
மனுதாரின் கையொப்பம்.

திகதி : ————.

6-697—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

இல. 1/23/4/14 (ஜி)

## பொது எழுதுவினைஞர் சேவையில் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1970 ஓகஸ்து

1957. 11. 15 இன் 1/36/2/1 (ஜி) திறைசேரிச் சுற்றறிக்கை நிருபத்தினையும் 1967. 11. 26 இன் ஜி (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தினையும் சேர்த்துப் படிக்கப்பட வேண்டிய 1955.10.1 இன் 10,844 இலக்கத்தையுடைய அரசாங்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு "இ" இல் விதித்த பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 1970, ஓகஸ்து 30 ஆந் தேதியில் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும். இப் பரீட்சையை நடாத்துவதற்கென அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சாத்திகள் கட்டுப்பட்டவராவர்.

3. இவ் அறிவித்தலின் சிங்கள, ஆங்கிலப் பகுதிகளின் கீழ் இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. 67. 1. 26 இன் ஜி (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தின் இரண்டாம் பந்தியிலுள்ள பணிப்புரைகளுக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கும் அமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1970 யூலை 15 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அடையத்தக்கதாகத் திணைக்களத் தலைவர்கள் வழியாகப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைப் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் கடித உறையின் இடது பக்கம் மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு தேதிக்குப் பின் பெறப்படும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பரீட்சாத்திகளுக்கும் புகவிடுதற்சீட்டையும் நேர அட்டவணையும் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்பு புகவிடுதற்சீட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அப்பரீட்சார்த்தி கொழும்பு, அ. பெ. இல. 1503, கொம்பனித் தெரு, மலே வீதியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் (தந்தி முகவரி: "எக்சாம்ஸ்", கொழும்பு) தாமதமின்றித் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவர் தமக்குப் புகவிடுதற்சீட்டை கிடைக்கவில்லையென்பதைப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பதுடன் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சைப் பெயர் :—

(2) முழுப் பெயர் :—

(3) முழு அஞ்சல் முகவரி :—

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு எண், அனுப்பிய தேதி :—

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு மே மீ 31 ந் உ.

### பரீட்சைப் பகுதி அலக்கம்

எல்லாப் பரீட்சாத்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சாத்தி பரீட்சாதிகாரியின் விருப்பப்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(1) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படும்.

(2) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(3) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(4) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(5) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(6) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சாத்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத் தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாத்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை ஆணைக் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சாத்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சாத்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சாத்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சாத்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்தல் வேண்டும். பரீட்சாத்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சாத்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சாத்திகளுடனோ தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சாத்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சாத்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சாத்தி பிறிதொரு பரீட்சாத்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சாத்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சாத்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சாத்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சாத்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சாத்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியன வற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டி விடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழியுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அடைச் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறுவோர் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்லப் பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பார். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவும் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களின் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டுப் பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்கக் குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்னாளே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அந்த மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபித்தற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், [illegible], பேரேட்டுத்தாள், சுருக்கி எழுது வதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், [illegible] கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வா[illegible] [illegible], [illegible], [illegible] [illegible] தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்படவேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் [illegible] வரைப்படங்கள், கோட்டுருவங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பத்திர முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் **(வலது பக்க மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள குறிப்புகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத் தாள் காணுமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான [illegible] தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்டவேண்டும்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

கே. ரி. டபிளியூ. சுமனசூரியா,
பரீட்சாதிகாரி.

6–651—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### ✓ தேசிய வீடமைப்புத் திணைக்களம்

கொஹுவல தோட்டை வீடமைப்புத் திட்டத்துக்கு முக்கிய நீர்க்குழாயை அமைப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1970, யூலை 2 ம் தேதியில் நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.
1970, யூலை 12 ம் தேதியில் காலை 10.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
இத்திணைக்களத்திலுள்ள அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு—2.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

6–670—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும்பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து/சுகாதார அலுவலகத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவவேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்பு பிரிவு சுகாதார சேவை அத்தியட்சர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவல கங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பண பற்றுச்சீட்டு இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுககு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடைந்த திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகுதிகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களில் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை யிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனே அல்லது என் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செயயப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிப்பிட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் மட்டக்களப்புப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு, 1970 ம் ஆண்டு ஜூன் மீ 17 ந் வ.

தா. சண்முகநாதன்,
சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

| (1) சேவை | (2) பிரிவு | (3) மாதாந்த உத்தேசத் தொகை ரூபா | (4) கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|
| வாழைச்சேனை புகையிரத ஸ்தானத்திலிருந்து வாழைச்சேனை சௌக்கிய வைத்திய அதிகாரி காரியாலய மூலமாக பால் கொடுக்கும் நிலையங்கட்கு | வாழைச்சேனை | 6,959 .. | 22.7.70 காலை 10 |
| மட்டக்களப்பு புகையிரத ஸ்தானத்திலிருந்து மட்டக்களப்பு சௌக்கிய வைத்திய அதிகாரி காரியாலய மூலமாக பால் கொடுக்கும் நிலையங்கட்கு | மட்டக்களப்பு | 3,916 .. | 22.7.70 காலை 10 |

6–692—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்கு கூறு விலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் 28.6.1970 அன்று பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

கூறுவிலைப் படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் விண்ணப்பமூலம் பெற்றுக்கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு யூன் மீ 13 ந் வ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

6–677—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912.

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

பம்பலப்பிட்டி அடுக்கு மாடிகளில் நீர் சேவையைத் திருத்தம் செய்வதற்காகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. 1970 ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் தேதி நண்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். 1970 ம் ஆண்டு யூலை மாதம் 20 ம் தேதி காலை 10 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கொழும்பு 2, தேசிய வீடமைப்புத் திணைக்களத்திலுள்ள அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜ. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

6–669—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912.

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்புத் துறைமுக இராணி எலிசபேத் மேடையடியில் 720 கியூப் ¾" கற்களை வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப்பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970 ஜூலை, 23 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1970, ஜூலை, 23 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்துமூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக்கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1970, ஜூலை, 21 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எஸ். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு–1,
15.6.1970.

6–699—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### பொல்கொல்ல வேலைகள்

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பொல்கொல்ல பகுதி, மகாவலி திட்ட பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 15 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். நீர்ப்பாசன திணைக்களத்துடன் ரூபா. 25,000/– க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்கள் மாத்திரமே தகுதியுடையவராவர்.

(1) தற்காலிக விடுதி அமைத்தல்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதியில் அனுப்பப்படவேண்டும். இதற்கான கேள்விப்பத்திரங்கள் பொல்கொல்ல, உக்குவலை போவத்தன்ன உப நீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 9 ம் திகதி முதல் யூலை மாதம் 12 ம் திகதிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

இக்கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முன்வருவோர் தங்கள் பதிவு புத்தகத்தையும், தற்போது இத்திணைக்களத்துடன் நடத்தும் வேலைகளில் விபரத்தையும் அதன்முன்னேற்றத்தையும் விபரிக்கும் நட்சாட்சி பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும்.

மேற்கூறிய பொறியியலாளரின் காரியாலயம் ஒன்றில் அல்லது கச்சேரியில் ரூபா. 25/– கட்டி, கட்டிய பற்றுச் சீட்டை காண்பித்து வெற்றுப்பத்திரம் கோரவேண்டும். இக்கேள்விக்கான மேலதிக விபரங்களை பொல்கொல்ல உபநீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சோமசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மகாவலி திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
பொல்கொல்ல,
1970 ம் ஆண்டு யூன் மீ 15 ந உ.

6–686–25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

## கச்சேரி–வவுனியா

கீழ்க்காணும் கட்டிட வேலைகள் சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 23 ம் திகதி வியாழக்கிழமை நடுப்பகல் 12 மணிவரைக்கும் தனித்தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. புளியங்குளம் எல். டி. ஓ. ரோட்டில், குளாய், மதவு கட்டுதல்.
2. பாவற்குளம் முதலாம் படிவத்தில் உள்ள பூமாதேவி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டிட திருத்த வேலைகள்.
3. பொதுக்கிணறு கட்டுதல் மகாகச்சக்கொடியாவில்.
4. பொதுக்கிணறு கட்டுதல் பாலமோட்டையில்.
5. பொதுக்கிணறு கட்டுதல் மாங்குளம் கொலனியில்.
6. பொதுக்கிணறு கட்டுதல் ஆனந்தபுரத்தில்.
7. சேமமடுவிலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் திருத்த வேலைகள்.
8. பாவற்குளம் III ம் படிவத்திலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் திருத்த வேலைகள்.
9. பாவற்குளம் முதலாம் படிவத்திலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் திருத்த வேலைகள்.
10. தண்ணிமுறிப்பிலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் கிணறு கேற், வேலி முதலியன அமைத்தல்.
11. புதிய காணிக்கந்தோரில் மேலதிக வேலைகள்.
12. முகத்தான்குளம் சிடி ரோட்டு திருத்த வேலைகள்.

அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களிடமிருந்தும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவைகளிடமிருந்தும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் கச்சேரியில் ரூபா 25/– (ஒவ்வோர் வேலைகளுக்கும்) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 22 ந் திகதி பிற்பகல் 3 மணி வரைக்கும் இக்கச்சேரியில் வழங்கப்படும்.

பி. சி. பெரேரா,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
வவுனியா,
1970 ம் ஆண்டு யூன் மீ 17 ந உ.

6–703–25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## சுகாதாரத் திணைக்களம்—குருநாக்கல் பிரிவு

### அழுக்குத்துணி சலவை செய்தல்—1970–71

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ந் திகதி (இருநாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் முதலாம் பந்தியிலுள்ள தாபனங்களுக்கு அழுக்குத்துணி சலவை செய்வதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட வெவ்வேறு கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழிற் தாபனங்களிடமிருந்து குருநாகல் சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 2 வது பந்தியில் குறிக்கப்படும் வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பாக இவ்வலுவலகத்திலும், அல்லது

| | | |
|---|---|---|
| அனுராதபுரம் | களுத்துறை | மாத்தறை |
| பதுளை | கண்டி | புத்தளம் |
| மட்டக்களப்பு | கேகாலை | இரத்தினபுரி |
| கொழும்பு | யாழ்ப்பாணம் | வவுனியா |
| காலி | மாத்தளை | |

ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் கொடுக்கப்படும். குறித்த பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைத் தபால் மூலம் பெறுதற்கு தகுதியுள்ள கேள்விக்காரர்கள், கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு ஏற்றதாக நேரகாலத்தோடு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யமுன் கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **சலவை செய்ய வேண்டிய துண்டுகளின் விபரங்கள்.**—மாதாந்தம் சலவைசெய்ய வேண்டிய துண்டுகளின் உத்தேசத் தொகை விபரங்கள் கீழ்க்காணும் அட்டவணையின் 5 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், குருநாகல் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக்கொண்ட உறையின் இடதுபக்கத்தின் மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்த அலுவலகத்திலிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது செயலாளர்/கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 6 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடன்டியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியை நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பத்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப்பணம்.**—கேள்விகள் ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பத்தியில் தரப்பட்டிக்கும் பிணைவைப்புப்பணத்தைச் செலுத்திய பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **வேறு விபரங்கள்.**—(i) **களஞ்சிய அறை, மின்சாரம், நீர் ஏனைய வசதிகள்.**—களஞ்சிய அறை, மின்சாரம், ஏனைய வசதிகள் பெறப்படின் அச்சலுகைகளுக்கான செலவை அவ்வூர் பெரும்பாக இறைவரி அதிகாரியினால் கணிக்கப்பட்ட விகிதப்படி மாதாந்தம் ஒப்பந்தக்காரின் மாதாந்த உறுதிச்சீட்டிலிருந்து அறவிடப்படும்.

(ii) **அழுக்குத்துணிகளை கிருமிநாசினி செய்யவேண்டிய அதற்கான போக்குவரத்துக் கட்டணம்.**—அழுக்குத்துணிகளை சலவை செய்யுமுன் கிருமிநாசினி செய்யவேண்டி நேரிடின் தாபனங்களிலிருந்து கிருமிநாசினி நிலையத்திற்கு எடுத்துக்கொண்டு திரும்பக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் கொடுபடமாட்டா.

(iii) **உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள்.**—உள்ளூராட்சி நிலையங்களுக்கான கேள்விகளை அவ்வுள்ளூராட்சி விதிகளுக்கு—ஏதும் உண்டானால்—அமையச் சலவைச்சாலைகள் நடாத்துபவர்களே விண்ணப்பிக்கலாம்.

(iv) கேள்விக்காரர்கள் விரும்பினால் ஒரு பகுதிக்கு அல்லது எல்லாப் பகுதிகளுக்கும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டுப்பணமாக கேள்விப்பத்திரம் அனுப்பும் ஒவ்வொரு பகுதிக்கும் செலுத்தவேண்டும்.

எம். காராளசிங்கம்,
குருநாகல் சுகாதார சேவை அத்தியட்சகருக்காக.

1970 ம் ௵ யூன் ௴ 7 ந் உ.

### குறித்த அட்டவணை

| (1) தாபனம் | (2) கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் | (3) பிணைவைப்புப் பணம் | (4) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய தடவைகள் | (5) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துணிகளின் சராசரித்தொகை | (6) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | | |
| அரசினர் வைத்தியசாலை—குருநாகல் | | | | | |
| பிரிவு 1 | 100 | 200 | 4 | 5,500 | 16.7.1970 |
| பிரிவு 2 | 100 | 200 | 4 | 6,000 | மு.ப. 10 |
| பிரிவு 3 | 100 | 300 | 30 | 20,500 | மணி |

6–653/3—25.6.70 திகதிய வர்த்தமானி இல. 14,912

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த, சமைக்காத உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**— 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் செப்ரம்பர் மாதம் 30 ந் திகதி 1971 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்ததும் சமையாத உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து பதுளைப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்கட்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், இடதுபக்க கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**— கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் விதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தை கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுக்கப்படும் உணவிற்குத் தேவையான அரிசிக்கு மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியினால் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. வாரத்திற்கு ஒருவருக்குரிய கட்டுப்பாடு அரிசி அளவை அடிப்படையாகக் கொண்டு நிலையப் பொறுப்பு அலுவலாளர் மூலம் ஒப்பந்தக்காரருக்கு வாரந்தோறும் அரிசி வழங்கப்படும்.

தா. சண்முகநாதன்,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந் உ.

#### மேல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை

| (1) நிலையம் | (2) கேள்வி வைப்புப் பணம் ரூபா | (3) பிணை வைப்புப் பணம் ரூபா | (4) கேள்விகள் மூடப்படும் திகதி | (5) அண்ணளவான உணவுகளின் அளவு — ஊழியர்கட்கு: மீன் | மா.இறைச்சி | கருவாடு | மரக்கறி | நோயாளிகட்கு: மீன் | மா.இறைச்சி | கருவாடு | மாக்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சமைக்காத உணவு | | | | | | | | | | | |
| இங்கினியாகலை வைத்தியசாலை | 100 | 800 | 20.7.1970 மு.ப. 10 மணி | 400 | — | 775 | 1600 | 1300 | — | 2500 | 5130 |
| சமைத்த உணவு | | | | | | | | | | | |
| காத்தான்குடி வைத்தியசாலை | 100 | 400 | | 120 | 100 | 100 | 450 | 600 | 530 | 500 | 2100 |
| மத்தியமுகாம் வைத்தியசாலை | 100 | 600 | | 100 | — | 160 | 330 | 550 | — | 1050 | 2130 |
| சம்மான்துறை வைத்தியசாலை | 100 | 600 | | 300 | — | 650 | 1250 | 600 | — | 1220 | 2560 |
| வாளைச்சேனை வைத்தியசாலை | 100 | 800 | | 150 | — | 300 | 620 | 700 | — | 2800 | 5570 |
| செங்கலடி கி. வைத்தியசாலை | 100 | 800 | | 300 | — | 600 | 1920 | 700 | — | 2000 | 3840 |

6–627—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## நீர்ப்பாசன இலாகா—செங்கலடி உப-பிரிவு

மட்டக்களப்பிலுள்ள கிழைப்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினல் செங்கலடி உப-பிரிவுள்ள கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள், நீர்ப்பாசன இலாகாவினல் கீழ்க்காணும் தொகைக்குக் குறையாமல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1970 ம் ஆண்டு "ஆடி" மாதம் 20 ம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு காலை 10.05 மணிக்கு பரிசீலனை செய்யப்படும்.

| கேள்வியின் விபரம் | ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை | கேள்விக் கட்டணத் தொகை |
|---|---|---|
| 1. கிரான் வடமுனை வீதியில் இரண்டு நீரிடைப் பாதைகளும் மூன்று பாலங்களும் அமைத்தல் .. | ரூபா. 40,000 .. | ரூபா. 50 |

வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு "ஆடி" மாதம் 16 ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் செங்கலடி, கல்முனை, அம்பாறை நீர்ப்பாசன காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். மரியசிங்கம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
செங்கலடி உப-பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி,
1970 ம் ௵ யூன் ௴ 10 ந உ.

6–585—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## வித்தியாபகுதி

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ம் திகதி திங்கட்கிழமை 10.30 மணிவரை யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| (1) யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | கைப்பணிப்பகுதிக் கட்டட விரிவாக்கம் |
| (2) டை .. | மனையியல் கட்டடம் அமைத்தல் மாவட்ட குறுக்கம் |

யா=யாழ்ப்பாணம் மாவட்டம்

**குறிப்பு** : பதிவுத்தகைமை

மேற்கூறிய 1 ம் வேலைக்கு ரூபா 19,000 மும் அதற்கு மேலும்.

மேற்கூறிய 2 ம் வேலைக்கு ரூபா 34,000 மும் அதற்கு மேலும்.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு கல்வி அமைச்சில், பொது வேலைப்பகுதியில் அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1970 ம் ஆண்டு யூலை ௴ 19 ம் உ ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 15,000க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத், தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100 கொழும்பு கல்வி அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித்திணைக்களத்திலே அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக்கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச் சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வடபெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி கண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படு முன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. 2 ம் 3ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால்மூலம் தலைவர் கேள்விச்சபை,வடபெரும்பாக கல்வித் திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப் பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித் திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர் விலாசம் முதலியன குறிப்பிடப்படல் வேண்டும்.

5. 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண, 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வட பெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்து காண்பிக்கப்படும்.

6. கேள்விப் பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்த பின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

8. இக்கேள்விப் பத்திரங்களுக்கு 1966.9.30 ம் திகதிக்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தக்காரப் பதிவிகள் கல்வி கலாச்சார அமைச்சில் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
153 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 1970 ந் ௵ ஜூன் ௴ 16 ந உ.

6–695—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## சுகாதாரத் திணைக்களம்—குருநாகல் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்—1970/71

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், குருநகல் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிய பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்கள் எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் :—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருநாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், குருநாகல் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நான்காவது பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத்தொகையை அடிப்படையாகக்கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்வியாளர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் விதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப் படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விகள் மூடப்படும் திகதியிலிருந்து ஆறு மாத கால எல்லைவரைக்கும் கேள்விக்காரர்கள் தங்கள் கேள்வி விதங்களை ஏற்றுக்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை மீள்வதற்கு இடமளிக்கப்படமாட்டார்கள்.

10. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

11. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

12. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குத் தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

13. நோயாளர்களாகவும், வேலைக்காரர்களால் ஒப்படைக்கப்பட்ட பங்கீட்டுச்சிட்டைகளுக்கும் உணவிலாக்காவிலிருந்து இனமாகவோ அல்லது 19.12.66 ல் இருந்து நடைபெறும் விலைக்கோ அரிசி பெற்றுக்கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்கள் தாபனப் பொறுப்பதிகாரால் உத்தரவுச் சீட்டுகள் வழங்கப்படுவார்கள்.

14. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களில் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

மா. காராளசிங்கம்,
குருநாகல் சுகாதார சேவை அத்தியட்சகருக்காக.

குருநாகல்,
1970 ம் ஆண்டு யூன் மீ 7 ந உ.

குறித்த அட்டவணை

| (1) | (2) | (3) | (4) | (5) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
| | | | | வேலைக்காரர்களுக்கு | | | | நோயாளர்களுக்கு | | | |
| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரம் | மீன் | மா.இ. | கருவாடு | காய்கறி | மீன் | மா. இ. | கருவாடு | காய்கறி |
| மாஹோ வைத்தியசாலை .. | 100 .. | 1,100 | | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 2,500 .. | 2,500 .. | 2,500 .. | 10,000 |
| மாவத்தகம வைத்தியசாலை .. | 100 .. | 1,100 | | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 2,800 .. | 2,800 .. | 2,800 .. | 11,200 |
| பொல்கஹவெல வைத்தியசாலை .. | 100 .. | 1,000 | | 300 .. | 300 .. | 300 .. | 1,500 .. | 2,000 .. | 2,000 .. | 2,000 .. | 8,000 |
| பொல்பித்திகம வைத்தியசாலை .. | 100 .. | 1,000 | | 300 .. | 300 .. | 300 .. | 1,000 .. | 2,000 .. | 1,800 .. | 1,900 .. | 6,000 |
| அலவ்வ கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 100 .. | 100 .. | 100 .. | 300 .. | 1,500 .. | 1,500 .. | 1,500 .. | 6,200 |
| பிங்கிரிய கி. வை. : பி. வி. .. | 100 .. | 400 | | 300 .. | 300 .. | 300 .. | 1,500 .. | 400 .. | 400 .. | 400 .. | 1,700 |
| கொக்கறல்ல கி. வை. : பி. வி. .. | 100 .. | 800 | | 100 .. | 100 .. | 100 .. | 200 .. | 2,000 .. | 2,000 .. | 2,000 .. | 8,000 |
| ஹெற்றிப்பொல கி. வை. : பி. வி... | 100 .. | 600 | | 600 .. | 600 .. | 600 .. | 3,000 .. | 1,000 .. | 1,000 .. | 1,000 .. | 3,000 |
| ஜீரிப்பிற்றிய கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 900 .. | 900 .. | 900 .. | 4,000 |
| கன்தானகெதற கி. வை. : பி. வி... | 100 .. | 800 | 1970.7.15 ல் | 400 .. | 400 .. | 400 .. | 1,600 .. | 500 .. | 500 .. | 500 .. | 2,100 |
| கட்டுப்பொத்த கி. வை. : பி. வி. .. | 100 .. | 800 | முற்பகல் 10 | 100 .. | 100 .. | 100 .. | 400 .. | 1,000 .. | 1,000 .. | 1,000 .. | 4,000 |
| மூவன்ஹெல கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | மணிக்கு | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 800 .. | 800 .. | 800 .. | 3,000 |
| நாரம்மல கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 600 .. | 600 .. | 600 .. | 2,400 .. | 1,500 .. | 1,500 .. | 1,500 .. | 6,000 |
| தலம்பிற்றிய கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 300 .. | 300 .. | 300 .. | 1,300 .. | 1,000 .. | 1,000 .. | 1,000 .. | 4,000 |
| பறலகிரிவாவ கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 300 .. | — .. | 500 .. | 1,000 .. | 1,000 .. | — .. | 3,000 .. | 5,000 |
| நிக்கவெவ கி. வை. : பி. வி. .. | 100 .. | 600 | | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 900 .. | 900 .. | 900 .. | 3,500 |
| அம்பன்பொல கி. வை. : பி. வி... | 100 .. | 600 | | 100 .. | 100 .. | 100 .. | 500 .. | 600 .. | 600 .. | 600 .. | 3,000 |
| கிளுக்கதெனிய பி. வி. .. | 100 .. | 300 | | 100 .. | 100 .. | 100 .. | 400 .. | 100 .. | 100 .. | 100 .. | 400 |
| மாஹாமூக்கலன்யாய பி. வி. .. | 100 .. | 300 | | 300 .. | 300 .. | 300 .. | 1,200 .. | 300 .. | 300 .. | 300 .. | 1,200 |
| தொரஸ்ஹேன பி. வி. .. | 100 .. | 300 | | 100 .. | 100 .. | 100 .. | 400 .. | 100 .. | 100 .. | 100 .. | 300 |
| சந்தலங்காவ பி. வி. .. | 100 .. | 300 | | 100 .. | 100 .. | 100 .. | 500 .. | 50 .. | 50 .. | 50 .. | 100 |

6–660—25. 6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## வனத் திணைக்களம்

தனமல்வில்லவிலுள்ள தேக்கங்கன்றுப் பண்ணையில் தொழிலாளர் கட்கான ஓர் இரணைக் குடிமனையும், ஓர் நீரடைப்பு மலசலகூடமும் கட்டுவதற்கான கேள்விகள் காலியிலுள்ள தென்பகுதி வன உத்தியோகத்தரால் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 2 ம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் காலியிலுள்ள தென்பகுதி வன உத்தியோகத்தரிட மிருந்து 1970 ம் ஆண்டு யூலை மாதம் 1 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களில் இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள், கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 கட்டிய பற்றுச்சீட்டுச் சமர்ப்பித்தே பெற வேண்டும். இக்கட்டுப்பணம் காலியிலுள்ள தென்பகுதி வன உத்தியோகத்தரின் பெயரில் " காலி " க் கச்சேரியில் கட்டப்பட வேண்டும்.

இரணைத் தொழிலாளர் குடிமனையும், நீரடைப்பு மலசலகூடமும் 20.9.1970 லோ அல்லது அதற்கு முன்போ கட்டிமுடிக்கப்பட வேண்டும். வேலை அட்டவணையும், மாதிரிப் படங்களும் காலியிலுள்ள பகுதி வன அலுவலகத்தில் பார்வையிடலாம்.

எஸ். மயில்வாகனம்,
தென்பகுதி வன உத்தியோகத்தர்.

பகுதி வன அலுவலகம்,
காலி.

6-647—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912.

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை—1.7.70 தொடக்கம் 30.6.71 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணைகளில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணைகளில் 1.7.70 தொடக்கம் 30.6.71 வரைக்கு மான கால எல்லைவரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும், பிரசுரிக்கப்பட்ட 14,898 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத்தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட கள்ளுக்குத்தகை 1970/71 என்று குறிப்பிட்டு யூன் மாதம் 30 ம் திகதி கீழே காட்டப்பட்டி ருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும், எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப் பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக் கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. **கேள்விக்காரர் :**

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப்பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத் துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணி யின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகை யின் 25 வீதத்திற்கு குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிர தியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத் தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணை யின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக் கவேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம் அல் லது வவுனியா கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்த தவறணைக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல்மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புகளைக்கொண்ட தாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண் ணப்பகாரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாகக் கச்சேரிப் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும், தேவையான முத்திரைகளைக் கொடுக்க வும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காக தெரிவு செய்திருக்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவிரும்பின் வவுனியாக் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணைகள் மதுவிற்பனை—1.7.70/ 30.6.71.

| இலக்கமும் இடமும் | தவறணைகளின் உள்ளூர் பகுதி | விற்பனைத் திகதி | நேரம் காலை |
|---|---|---|---|
| 1. புதுமாத்தலன் .. | பிதுமாத்தலன் கிராம எல்லைக்குள் | 30.6.70 .. | 9.30 |

பி. சி. பெரேரா,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா,
1970 ம் ஆண்டு யூன் மீ 16 ந வ.

6-671—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

---

# அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

## குடிவகை உத்தரவுச் சீட்டு

1930 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடைய 200 ஆம் இலக்கத்து மதுவரிச் சட்டத்திற்கு இணங்க 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முடிவடையும் உத்தரவுச் சீட்டுக் காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பட்டோலையில் காட்டப்பட்டிருக்கும் உத்தரவுச் சீட்டுகளுக்குக் கொழும்பு, களுத்துறை, காலி, நுவர எலிய, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், குருணாகலை ஆகிய மாவட்ட அதிபர் களுக்கு 1970 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியன்று நான் விண்ணப்பித்திருக்கிறேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கூறப்பட்ட பட்டோலை

| விண்ணப்பதாரியின் பெயரும், விலாசமும் | விண்ணப்பித்திருக்கும் உத்தரவுச்சீட்டின் விபரங்களும் | தற்போதைய உத்தரவுச் சீட்டைப் புதுப்பிக்கவா அல்லது புது உத்தரவுச் சீட்டிற்கா விண்ணப்பம் என்பதைக் கூறவும் | உத்தரவுச்சீட்டு எடுக்கப்படும் வளவின் இடம் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர், இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி, கொழும்பு 10 | புகையிரதப் பகுதி விடுதிச் சாலைகள், உணவு வழங்கும் சேவை (சில்லறை) | தற்போதைய உத்தரச் சீட்டைப் புதுப்பித்தல் | கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையம், கொழும்பு |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், மருதானை |
| டிெ .. | டிெ .. | டிெ .. | உணவு வண்டிகள், பானங்கள் வழங்கும் வண்டிகள், குடிவகை பண்டகசாலை |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், அளுத்கமை |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், காலி |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், நானு ஓயா |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், கண்டி |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், அநுராதபுரம் |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், யாழ்ப்பாணம் |
| டிெ .. | டிெ .. | டிெ .. | புகையிரத நிலையம், பொல்காவலை |

பீ. டீ. றம்பால,
பொது முகாமையாளர்,
இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி.
விண்ணப்பதாரியின் பெயர்.

த. பெ. இல. 355,
கொழும்பு
1970 ம் ஆடு ஜூன் மீ 16 ந் உ.

6–698—25.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,912

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500 செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை— 1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 6.70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

**அரசாங்க அச்சகப் பகுதி,**
கொழும்பு,
**1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.